# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,434—1962 දෙසැම්බර් 14 වැනි සිකුරාදා—1962.12.14**

13,434 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 683 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


[இவ்வெளியீட்டில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகாரர் முதலியோரின் நாமாவலி பகுதி VI இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.]

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி—பி. 16/64.

### கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தற்) சட்டம்

தொழில், தேசியமய சேவை மந்திரி மைக்கேல் போல் த சொய்சா சிரிவர்த்தன ஆகிய நான், 1957 ம் ஆண்டின் 60 ம் இல. சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட (129 ம் அத்தியாயமாகிய) கடை, காரியாலய ஊழியர் (வேலை, வேதனம் ஒழுங்குபடுத்தற்) சட்டத்தின் 7 ம் பிரிவின் பிரகாரம், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட நாட்கள் (177 ம் அத்தியாயமாகிய) விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய அரசாங்க விடுமுறைகளென்பதால் மேற்கூறிய பிரிவின் நோக்கங்களுக்காக அவற்றை விடுமுறைகளென இக்கட்டளையால் பிரகடனஞ் செய்கின்றேன்.

மை. போ. த சொ. சிரிவர்த்தன,
தொழில், தேசியமய சேவை மந்திரி.

1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ந் தேதி

அட்டவணை

1. சிங்கள பொசன் மாதத்துப் பௌர்ணமி தினமாகிய 1963 ம் ஆண்டு யூன் மாதம் 6 ந் தேதி.
2. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினமாகிய 1963 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ந் தேதி.

12–533.

### முக்கிய விளம்பரம்

*1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 22 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மீ 14 ந் உ.*

## 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

### பிரிவு 2 (1) இன் கீழான கட்டளை

1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தியமைக்கப்பட்டுள்ள 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர், சாள்ஸ் பேர்சிவல் த சில்வா ஆகிய நான் இக்கட்டளை மூலம் 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ந் தேதியை, மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 53 இல் சொல்லப்பட்ட ஏற்பாடுகள், சிலாபம்–புத்தளம் பரிபாலன மாவட்டத்துள் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக நியமிக்கிறேன்.

சீ. பி. த சில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார
அமைச்சர்.

கொழும்பு, 12–12–1962.

12–624

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.